# சிலப்பதிகாரத்தில் காணலாகும் திருக்குறளின் மேன்மை

76

**செ.சரவணாதேவி**
**முதுகலை தமிழாசிரியர்**
**கற்பக விநாயகா பதின்ம மேல்நிலைப்பள்ளி , புதுக்கோட்டை**

**முகவுரை:**

தமிழ் பண்பாட்டை தரணிக்கு எடுத்தியம்பும் தன்னேரில்லா இலக்கியம் திருக்குறள் உலக மக்கள் அனைவருக்கும்இ எந்தக் காலத்திற்கும் எவ்வகையிலும் பொருந்தும் வகையில் அமைந்ததால்இ திருக்குறள் “உலகப் பொதுமறை என போற்றப்படுகிறது. தொன்மைத் தமிழரின் கலைச்சிறப்பிற்கு எடுத்துக்காட்டாய் வி”ளங்கி இ பெண்ணிற்கு பெருமை தரும் முதல் தமிழ் காப்பியமாய் முத்தமிழின் திறமெல்லாம் ஒருங்கே காட்டி நிற்கும் தமிழின் முதற் காப்பியமாம் சிலப்பதிகாரத்தில் வள்ளுவத்தின் வழியில் சொல்லாட்சியும் இ பொருளாட்சியும் அமைந்து சிறக்கும் தன்மையை இக்கட்டுரை வழிக் காண்போம்.

**அறம் கூற்று**

“அரசாட்சியில் சிறிது பிழை செய்யினும் அவர்க்கு அறக்கடவுளே எமனாகும்” என்பதை சிலம்பு உணர்த்தும் முப்பெரும் அரிய உண்மைகளுள் ஒன்றான “அரசியல் பிழைத்தோர்க்கும் அறம் கூற்று ஆவதூஉம்” (பதிகம் வரி 55)

என்ற சிலம்பின் வரிகள் “அறத்தினூங்கு ஆக்கமும் இல்லை அதனை ” மறத்தலிணங்கு இல்லை கேடு(குறள் 32) ஃ “அறம் ஆக்கத்தைத் தரும்இ அதை மறப்பின் கேடு விளையும் ” என்ற குறள் கருத்தின் தாக்கமாகவே அமைந்துள்ளதை அறியலாம்.

வான் சிறப்பு:

உலகத்து உயிர்கள் வாழ உதவும் மழை அமிழ்தமாகக் கருதப்படும்இ அம்மழையின் சிறப்பை விளக்க திருவள்ளுவர் “வான் சிறப்பு ” என்று ஒரு தனி அதிகாரமே இயற்றியுள்ளார். சிலம்பிலும் இளங்கோவடிகள் வானை வணங்குகிறார்.

மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும் (மங்கல வாழ்த்துப்பாடல் : 7)

என்று மழையை கடவுள் வாழ்த்தாகக் கொண்டிருக்கிறார்.

நாவடக்கம்

கவுந்தியடிகளிடம் வம்பப்பரத்தையும் இ வறுமொழியாளனும் இ கோவலனையும்இ கண்ணகியும் யார்? என வினவஇ கவுந்தியடிகள்இ “இவர்கள் என் மக்கள் இ காமனும் ரதியும் அல்லர்இ மானிடயாக்கையர் இ வழிநடைப் பயணத்தால் வருந்துகின்றனர். அவர்களிடம் செல்லாது சற்றே விலகிச்செல்லுங்கள்” என்றார்.

அது கேட்ட அவர்கள் “கற்றறிந்தீர்!நும் மக்கள் என்கிறீர்! ஒரு வயிற்றில் பிறந்தோர் கணவனும் மனைவியுமாகக் கூடி வாழ்க்கை நடத்தல் உண்டோ ? எனக் குறும்பாகக் கேட்டு எள்ளி நகையாடினர். அத்தீமொழி கேட்ட கண்ணகி இரு செவிகளையும் பொத்திக்கொண்டு கணவன் முன் நடு நடுங்கி நின்றாள். அதனைக் கண்ட கவுந்தியடிகள் இவர்கள் எனது பூங்கோதை போன்றவளை இகழ்ந்தனர் போலும்! முள் நிறைந்த காட்டில் முது நரியாகுக என அவர்களைச் சபித்தார்.

உடன்வயிற்றோர்கள் ஒருங்குடன் வாழ்க்கை
கடவதும் உண்டோ கற்றறிந் தீரெனத்
தீமொழி கேட்டுச் செவியகம் புதைத்துக்
காதலன் முன்னர்க் கண்ணகி நடுங்க

எள்ளுநர் போலும் இவர் என் பூங்கோதையை
முள்ளுடைக்; காட்டின் முதுநரி யாகெனக்
கவுந்தியிட்ட தவம் தரு சாபம் -
(நாடு காண் கதை – 227-233)

இக்கருத்தானது 'அடக்கமுடைமை' அதிகாரத்தில்
யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பார் சொல்லிழுக்கப்பட்டு (குறள் 127)

"எல்லாப் பொறிகளையும் தம்மால் அடக்க முடியாவிட்டாலும் நாவை மட்டுமாகிலும் அடக்குதல் வேண்டும். இல்லையேல் சொற்குற்றத்தால் துன்புறுவார்" என்ற குறட்பா வழியில் அமைந்துள்ளது.

இன்னா செய்யாமை

வம்பப்பரத்தையும்இ வறுமொழியானும் கண்ணகியையும்இ கோவலனையும் எள்ளி நகையாடியல் கவுந்தியடிகள் அவர்களை நரிகளாக மாற சபித்தார். அவர்களும் நரிகளாக மாற அதனைக்கண்டு கோவலனும்இ கண்ணகியும் "ஒழுக்கத்தினின்றும் நீங்கியோர் நீர்மை அல்லாத தீய மொழிகளைக் கூறினாலும்இ அறியாமை என்று அறிதல் வேண்டும் " எனக் கருதி இ கவுந்தியடிகளைத் தொழுது நோக்கிஇ "செய்தவத்தீர்! நும் முன் இத் ;தவறிழைத்த இவர்க்கு இக்கடிய சாபம் நீங்கி உய்வதற்குரிய காலத்தை அருள்வீராக" என வேண்டினார் " தமது அறியாமையால் இன்று இவ்விழி பிறப்பினை அடைந்தோர் உறையூரின் மதிற்புறத்தே அமைந்த காவற்காட்டில் ஒரு புறத்தே பன்னிரண்டு மாதங்கள் நரிகளாகத் திரிந்து துன்பிற்ற பின் முன்னைய உருவத்தைப் பெறுவர் " என அவர்களுக்கு சாப விடுதலை தந்தருளினார் கவுந்தியடிகள் இவ்வாறு தமக்கு இன்னாத செயல்களைச் செய்தாலும் அவர்களை மன்னிக்கும் பக்குவம்

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல்" (குறள் 314)

"துன்பம் செய்தவரைத் தண்டிக்காது அவர் வெட்கப்படும் படி நல் உதவியைச் செய்து அதனையும் மறந்து விட வேண்டும்" என்ற குறட்பாவின் தாக்கமாக அமைந்திருப்பதைக் காணலாம்.

நலம் பாராட்டல்

கோவலன் கண்ணகியின் நலம் பாராட்டி உரைக்கும் வரிகளில்

"குழலும் யாழும் அமிழ்தும் குழைத்தநின்
மழலைக் கிளவிக்கு வருந்தின வாசியும்
(மனையறம் படுத்த காதை 58-59)

குழலிசையையும் இயாழிசையையும் இ அமிழ்தையும் குழைத்தது போலும் நின் மழலைப் பேச்சு என்று கோவலக் கண்ணகியின் பேச்சை வர்ணிக்கும் வரிகள்இ

"குழலினது யாழினிது என்ப தம்மக்கள்
மழலைச் சொல் கேளாதவர் (குறள்66)

குழலோசை . யாழோசை இவற்றைக் காட்டிலும் தங்கள் குழந்தைகளின் மழலைச் சொற்கள் மிகவும் இனிமையாகும் என்ற குறளின் தாக்கமே ஆகும்.

கண்ணகியின் துன்பம்:

அல்லலுற் றாற்றா தழுவாளைக் கண்டு ஏங்கி
மல்லல்மதுரையா ரெல்லாரும் தாமயங்கி (ஊர்சூழ் வரி 15-16)

துன்புற்று ஆற்றாது அழுது புலம்பும் கண்ணகியைக் கண்டு ஏங்கி வளமான மதுரை வாழ் மக்கள் எல்லாரும் செய்வதவறியாது திகைத்தனர். நீக்க முடியாத துன்பத்தை இக்காரிகைக்கு செய்து எக்காலத்தும் வளையாத செங்கோல் வளைந்ததே! இதற்கு யாது காரணமோ ? என்றனர். இவ்வரிகள்இ

“அல்லல்பட்டு ஆற்றாது அமுதகண்ணீர் அன்றே

செல்வத்தைத் தேய்க்கும் படை”

ஆற்ற இயலாத துன்பத்தால் மக்கள் அரற்றி அழுது சிந்தும் கண்ணீரே ஆட்சியை அழிக்கும் கருவியாகும் என்ற குறட்பா கருத்தின் பிரதிபலிப்பாக அமைந்துள்ளதை
அறியலாம்:

**இல்லறச் சிறப்பு**

கணவனும் மனைவியும் வரும் விருந்தினரைப் போற்றி விருந்தோம்பல் செய்விப்பது இல்லற்றத்தின் மேன்மையான பண்புகளில் ஒன்றாகும். கோவலனைப் பிரிந்ததால் கண்ணகி விருந்தோம்பலை செய்ய இயலாது வருந்தினாள் இதனை

“அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்

துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்

விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை …… (கொலைக்களக் காதை 70-73)

கோவலனைப் பிரிந்ததால் கண்ணகிஇ அறவோர்க்கு அளித்தலையும் இ அந்தணரைப் போற்றுதலையும்இ துறவிகளை எதிர்கொண்டு பணிவிடை செய்தலையும்இ சான்றோர் போற்றும் சிறப்புடைய விருந்தினரை வரவேற்று உபசரித்தலையும் இழந்திருந்ததாக வருந்திக் குறிப்பிடும் வரிகள்

“இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி

வேளாண்மை செய்தற் ; பொருட்டு (குறள் 81) இல்லறத்தில் இருந்துஇ பொருள் போற்றி வாழ்வது விருந்தினரைப் பேணி உதவி செய்வதற்கேயாம்

“துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும்

இல்வாழ்வான் என்பான் துணை (குறள்) 42)

பிறரால் கைவிடப்பட்டவர்கள் இ வறியர்இ பசியால் வாடுபவர் ஆகியோருக்கு இல்வாழ்வான் துணை செய்ய வேண்டும் - என்ற குறட்பாககளின் தாக்கங்களாக இளங்கோவடிகள் அமைத்ததைக் காணாலம்.

**உண்மை நிலை ஆராய்ந்தறிதல்**

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்பது அறிவு (குறள் 423)

யார் எதைச் சொன்னாலும் அதை அப்படியே நம்பி ஏற்காமல் உண்மை எது என்று ஆராய்ந்த தெளிவது அறிவுடைமையாகும்.

எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்

மெய்பொருள் காண்ப அறிவு (355)

பொருளின் தன்மையைக் கண்டு மயங்காமல் அதன் உண்மையை உணருவது தான் அறிவாகும். என்ற குறட்பாக்களின் கருத்துக்கேற்ப அரசன் ஆராய்ந்து நீதி வழங்கியிருந்தால் தீய விளைவுகள் ஏற்பட்டிருக்காது. பொற்கொல்லனின் பேச்சை நம்பி ஆராயாமல் நீதி வழங்கியதால் கோவலன் கொலையுண்டான். மதுரை தீக்கிரையானது பாண்டிய மன்னன் உயிரிழந்தது ஆகியவை நிகழ்ந்தன.
அன்பு வழி

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்

என்பும் உரியர் பிறர்க்கு (குறள் 72)

அன்பிலார் தன்னலமுடையார் இ அன்புடையார் உடலாலும் பொருளாலும் பிறருக்குதவுவர் என்ற குறளுக்கேற்ப கவுந்தியடிகள் மூலமும்இ மாதிரி மூலமும் அன்பு வழியை மனித நேயத்தின் மாண்பினை இளங்கோவடிகள் சிலம்பில் உணர்த்துகிறார்.

**ஊழின் வலிமை**

ஊழ்வினையைக் காட்டிலும் வலிமையானது வேறொன்றும் இல்லை " என்பதை வள்ளுவர் கருத்து. இக்கரத்து சிலம்பிலும் வலியுறுத்தப்படுகிறது. சிலப்பதிகாரம் காட்டும் மூன்ற அரிய உண்மைகளில் ஒன்றாக ஊழ்வினையை ஆசிரியர் எடுத்துக்கொண்டதால் காப்பியம் முழுவதிலும் ஊழின் வலிமையைக் காண முடிகிறது.

கோவலன் கண்ணகியை விட்டு பிரிந்து மாதவியுடன் வாழத் தொடங்குகிறான். இருவரும் மன மகிழ்வுடன் கானல் வரி பாடத்தொடங்குகின்றனர். கோவலன் பாடிய பாடலைக் கேட்ட மாதவி தானும் ஒன்றின் மேல் மனம். வைத்துப் பாடலைப் பாட கோவலன் மாதவியைப் பிரிகிறான். மாதவியைப் பிரிய ஊழவினையே காரணம.; யாழிசை மேல் வைத்துதான் ஊழ்வினைவந்து உருத்ததாகலின்

உவவுற்ற திங்கள் முகத்தாளைக் கவவுக்கை ஞெகிழ்ந்தனனாய்ப்
பொழுதங்குக் கழிந்ததாகலின் எழுதுமென்று உடனெழாது
ஏவலாளருடன் சூழ்தரக் கோவலன் தான் போனபின்னர்
(கானல்வரி 54-57)

இவ்வரிகள் "வகுத்தான் வகுத்த வகை அல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது.(377)

கோடிக்கணக்கான பொருள் இருந்தாலும் அவற்றை நுகர்வதற்கு ஊழ் துணையில்லாவிட்டால் இயலாது.

"பேதைப்படுக்கும் இழவு ஊழ் அறிவு அகற்றும்
ஆகல் ஊழ் உற்றக் கடை(372)

அழிவுக்கான ஊழ் அறியாமையை உண்டாக்கும் ஆக்கம் தரும் ஊழ் அறிவினைப் பெருக்கும். ஆகியகுறட்பாக்களின் தாக்கமாக அமைந்துள்ளதைக் காணலாம்.

முடிவுரை

அறம் என்னும் அற்புத அடித்தளத்திலே கட்டப் பெற்ற அழகுத் திருக்கோவிலாம் திருக்குறளின் சொல்லாட்சியும் பொருளாட்சியும் இடம்பெறாத இலக்கியங்களே இல்லை எனலாம். அந்த வகையில் தமிழின் முதற்காப்பியமான சிலப்பதிகாரத்திலும் திருக்குறளின் சொல்லாட்சியும் பொருளாட்சியும் அமைந்து அணி செய்கின்றன.

துணை நின்ற நூல்கள்

| நூல் | ஆசிரியர் | உரையாசிரியர் | பதிப்பகம் |
|---|---|---|---|
| 1.திருக்குறள் | திருவள்ளுவர் | புலவர்தி.சு.மலையப்பன் | உலகத்திருக்குறள்; பணிக்களம் புதுக்கோட்டை மாவட்டம் |
| 2.சிலப்பதிகாரம் | இளங்கோவடிகள் | ஜெ.ஶ்ரீசந்திரன் | வர்த்தமானன் பதிப்பகம் சென்னை |